# சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
## ஆயுர்வேத திணைக்களம்

## 111 ஆந் தர தாதி உத்தியோகத்தர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்.

தற்பொழுது வெற்றிடமாகக் காணப்படுகின்ற ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் உள்ள பின்வரும் மருத்துவமனைகளுக்கு 111 ஆந் தர தாதி உத்தியோகத்தர் பதவிக்கு பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் ஏற்பாட்டின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவின் 2019.05.22 ஆந் திகதியிட்ட 01/13/03/12-111 ஆம் இலக்க கடித்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

| நிறுவனம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| பொரளை ஆயுர்வேத போதனா மருத்துவமனை | 05 |
| பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் | 02 |
| சமல் ராஜபக்ஸ ஆயுர்வேத மருத்துவமனை | 10 |
| அம்பாறை ஆயுர்வேத மருத்துவமனை | 05 |
| கோணேஸ்புரி ஆயுர்வேத மருத்துவமனை | 08 |
| மதவாச்சி ஆயுர்வேத மருத்துவமனை | 01 |
| யுனானி ஆராய்ச்சி மருத்துவமனை | 04 |
| **மொத்தம்** | **35** |

02. இதற்கமைவாக கீழே காட்டப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள ஓய்வு பெற்ற தாதி உத்தியோகத்தர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

I. 2019.06.30 ஆந் திகதிக்கு 65 வயதுக்குக் குறைந்தவரும் ஆகக் குறைந்தது ஒரு வருடம் சேவையாற்றக்கூடிய ஆற்றலுமுள்ள அரசாங்க தாதி உத்தியோகத்தராக இருத்தல்.

II. ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படாதவரும், கட்டாய ஓய்வு பெறும் வயதை அடைந்ததன் காரணத்தால் ஓய்வு பெற்ற உத்தியோகத்தராக இருத்தல்.

III. தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கு உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமான உத்தியோகத்தர் என மருத்துவ சிபாரிசின் ஊடாக உறுதிப்படுத்தல்.

03. கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவைகள்

I. ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2018 அமைவாக மாதாந்த ஊதியமொன்று வழங்கப்படும்.

II. விசேட தர பதவியில் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள மேலே குறிப்பிட்ட சேவைக்குரிய உத்தியோகத்தர்கள் இதற்காக விண்ணப்பிக்கும் பட்சத்தில் 111 ஆந் தர பதவிகளிலேயே அவர்கள் மீள சேவைக்கமர்த்தப்படுவர்.

04. விண்ணப்பிக்கும் முறை

I. தற்பொழுது அரசாங்க சேவையில் கட்டாய ஓய்வு பெற்றுள்ள தாதி உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணையத் தளத்தில் உள்ள நுளுவு – 01 மாதிரிப்படிவத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தான் இறுதியாக சேவையாற்றிய திணைக்களத் தலைவரின் ஊடாக அவரின் சிபாரிசுடன் ஆயுர்வேத ஆணையாளருக்கு நேரடியாக ஒப்படைக்கவோ அல்லது பதிவுத் தாபாலில் அனுப்பி வைக்கவோ முடியும்.

( நுளுவு – 01 மாதிரிப் படிவத்தில் மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.)

05. விண்ணப்பப்படிவத்துடன் கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. உத்தியோகத்தரின் கோரிக்கை

II. உத்தியோகத்தரின் சுயவிபரம்

III. பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் கீழ் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பப்படிவம்

IV. உத்தியோகத்தர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற கடிதத்தின் உறுதிப்படுத்திய பிரதியொன்று

V. தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதியொன்று

VI. பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்திய பிரதியொன்று

VII. மருத்துவ அறிக்கை ( விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் தினத்துக்கு 04 வாரங்களுக்குள் பெற்றுக் கொண்ட)

06. விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டிய முகவரி

ஆயுர்வேத ஆணையாளர்
ஆயுர்வேத திணைக்களம்
பழைய கொட்டாவ வீதி
நாவின்ன
மஹரகம

07. விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதி - 2019.07.15

08. இந்த அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

பீ.எம். நிமல் பாலசூரிய
செயலாளர்
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய இராஜங்க அமைச்சு
2019.07.01